

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், முதலமைச்சரின் செயலாளர் முனைவர் எம்.எஸ். சண்முகம், அவர்களின் தாயார் திருமதி எம்.எஸ். ராஜலட்சுமி அவர்கள் நேற்று முன்தினம் (8.7.2025) உடல்நலக் குறைவால் காலமானதையொட்டி அன்னாரது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார். உடன் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா சுப்பிரமணியன் உள்ளார்.

# பேராசிரியர் கே.எம்.காதர் மொய்தீனுக்கு ‘தகைசால் தமிழர்’ விருது!

## அமைச்சர் கே.என்.நேரு நேரில் வாழ்த்து!

திருச்சி, ஜூலை 10 -

தமிழக அரசின் 2025ம் ஆண்டுக்கான ‘தகைசால் தமிழர்’ விருதுக்கு இந்திய யூனியன் முஸ்லீக் கட்சியின் தேசியத் தலைவர் பேராசிரியர்கே.எம்.காதர் மொய்தீன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

‘தமிழகத்துக்கும் தமிழினத்தின் வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றியவர்களைப் பெருமைப்படுத்தும் வகையில், தகைசால் தமிழர் என்ற விருதை உருவாக்கவும், இந்த விருதுக்கான விருதாளரைத் தேர்வு செய்திட ஒரு குழுவை அமைத்திடவும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த 2021ல் ஆணையிட்டிருந்தார். இந்த விருது கடந்த 4 ஆண்டுகளில் சங்கரய்யா, ஆர்.நல்லகண்ணு, ஆசிரியர் கி.வீரமணி மற்றும் முனைவர் குமரி அனந்தன் ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

இந்த விருதுக்கான நடப்பாண்டு விருதாளரைத் தேர்வு செய்வதற்காக அமைக்கப்பட்ட குழுவின் கலந்தாலோசனைக் கூட்டம் சென்னை, தலைமைச் செயலகத்தில், தமிழக முதல்வர் தலைமையில் நடைபெற்றது. இதில் மூத்த அரசியல் தலைவரும், மணிச்சுடர் இதழின் ஆசிரியரும், இந்திய அரசியல் பற்றிய ஆழமான புரிதலுடன், சமூக நல்லிணக்கத்துக்காக தன் வாழ்நாளெல்லாம் உழைத்துவரும் பேராசிரியர் கே.எம்.காதர் மொய்தீன் அவர்களை பெருமைப்படுத்தும் வகையில், இந்த ஆண்டுக்கான தகைசால் தமிழர் விருதுக்கு அவரது பெயர் பரிசீலிக்கப்பட்டு, அவருக்கு இந்த விருதை வழங்க முடிவு செய்யப்பட்டது.

மேலும், பேராசிரியர் கே.எம்.காதர் மொய்தீன் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசியத் தலைவர் ஆவார். தமிழகத்தில் இவர் இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் தேசியப் பொதுச் செயலாளராகவும், தமிழ் மாநிலத் தலைவராகவும் இருந்தவர். மனிதநேய மாண்பாளர், பழகுவதற்கு இனிய பண்பாளர், அறிவார்ந்த சொற்பொழிவாளர், மனிதநேயத்துக்கும் மதநல்லிணக்கத்துக்கும்தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர்.

கோவையில் 2010ஆம் ஆண்டு நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் தமிழகத்துக்கும், அரபு நாடுகளுக்கும் உள்ள தொடர்புகள் பற்றிய ஆய்வுக் கட்டுரை வழங்கியவர். எட்டாண்டுகள் தொடர்ந்து தாருல் குர்ஆன் இதழில் ‘தமிழர்க்கு இஸ்லாம் வந்த மதமா? சொந்தமா?’ எனும் தலைப்பில் தொடர் கட்டுரையை எழுதியவர்.

வாழும் நெறி, குர்ஆனின் குரல், இசுலாமிய இறைக்கோட்பாடு உட்பட ஆறு நூல்களை எழுதியவர். மேலும் பேராசிரியர் கே.எம்.காதர் மொய்தீன் திருச்சி ஜமால் முகம்மது கல்லூரியில் 15 ஆண்டுகள் வரலாற்றுத் துறைப் பேராசிரியராகப் பணியாற்றியவர், கண்ணிய தென்றல் காயிதே மில்லத் காலம் முதல் தொடர்ந்து சமூக நல்லிணக்கம் பரப்பி வரும் சிந்தனையாளர், பல நூறு பட்டதாரிகளை உருவாக்கி அவர்களின்வாழ்வை உயரத்துக்கு உயர்த்திய ஆசானும் ஆவார்.

‘தகைசால் தமிழர் விருது’க்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பேராசிரியர் கே.எம்.காதர் மொய்தீன் அவர்களுக்கு ரூபாய்..10 லட்சம் ரூபாய்க்கான காசோலையும் பாராட்டுச் சான்றிதழும் வருகிற ஆகஸ்ட் மாதம் 15ஆம் நாள் நடைபெறும் சுதந்திர தின விழாவில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் வழங்கப்பட உள்ளது.

இந்நிலையில் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு காதர் மொய்தீன் வீட்டிற்கு இன்று நேரில் சென்று அவருக்கு பொன்னாடை போற்றி வாழ்த்து தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, மாநகர மேயர் அன்பழகன், வடக்கு மாவட்ட செயலாளர் காடுவெட்டி தியாகராஜன், மாவட்ட பொருளாளர் துரைராஜ், உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்..

# துறைமுகம் தொகுதியில் அறுசுவை உணவு வழங்கல்!

சென்னை, ஜூலை 9 -

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 139 ஆம் நாளான

கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று முன்தினம் (08.7.2025) துறைமுகம் தொகுதி: 1) துறைமுகம் கிழக்கு பகுதி: 55‘ஆ’ வட்டம், கோவிந்தப்பா தெரு, சடையப்பன் தெரு, கார்னர் ஏழுகிணறு. 2) துறைமுகம் மேற்கு பகுதி: வட்டம் 59 நாரயணப்பா ரோடு, என்.எஸ்.சி போஸ் ரோடு, பிராட்வே பஸ் ஸ்டாண்ட் (போலீஸ் பூத் அருகில்) ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு அவர்களின் வழிகாட்டுதல்படி “தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மேயர் பிரியா ராஜன், எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர், இசட்.ஆசாத், பி.ஸ்ரீராமுலு, ஜி.எம்.தேவன், எம்.விஜயகுமார், என்.பி.எம். ஷேக் அப்துல்லா, இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி, பி.விஜய குமார், எல்.சம்பத்குமார், பா. பிரதாப்குமார்,

எம்.விநாயகம், ப.ஜெகதீஷ் வட்டச் செயலாளர்கள்: எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா, எம்.பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா. பார்த்திபன், எம்.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.இரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா. அண்ணாதுரை, டி.சதிஷ்குமார், வே.பா.பிரபாகரன், லண்டன் க. முருகன். ஒருங்கிணைப் பாளர்கள்: சொ. வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம், சங்கராபுரம் சட்டமன்ற தொகுதி, சின்னசேலம் வடக்கு ஒன்றிய கழக இளைஞரணி சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் மற்றும் திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனை பிரச்சாரக்கூட்டம், கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழக செயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ. தலைமையில், வடக்கு ஒன்றிய கழக செயலாளர், ஒன்றிய குழு துணை தலைவர் அ.வெ.அன்புமணி மாறன் முன்னிலையில் எலியத்தூரில் நடைபெற்றது, இதில் தலைமைக் கழக பேச்சாளர் கந்திலி கரிகாலன், கழக இளம் பேச்சாளர் செல்வி தஞ்சை பூர்ணிமா, மாநில மகளிர் அணி துணைச் செயலாளர் ஆ.அங்கையற்கண்ணி ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்துகொண்டு, திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை திட்டங்களை பொதுமக்களிடம் எடுத்துரைத்தனர், கூட்டத்தில் மாவட்ட, ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் மாவட்ட, ஒன்றிய அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக மூத்த முன்னோடிகள், வாக்குச்சாவடி பாக முகவர்கள், வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள், இளைஞர்கள், பொதுமக்கள் என அனைவரும் பெருந்திரளாக கலந்துகொண்டனர்.



வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் ஆகியோர் தனியார் பள்ளி வாகனம் மீது இரயில் மோதிய விபத்தில் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர்களை நேற்று முன்தினம் (08.07.2025) நேரில் சந்தித்து நலம் விசாரித்தனர். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராஜேந்திரன், மாநகராட்சி மேயர் திருமதி சுந்தரிராஜா, துணை மேயர் பா.தாமரைச்செல்வன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.ஜெயக்குமார், உட்பட பலர் உள்ளனர்.

## கடலூர் மாவட்டம்: தனியார் பள்ளி வாகனம் இரயில் மோதி விபத்து!

# உயிரிழந்த மாணவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதி ரூ.10 லட்சம்!

## அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்–சி.வெ.கணேசன் வழங்கினர்!

கடலூர், ஜூலை 10-

வேளாண்மை உழவர் நலத்துறை எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் ஆகியோர் தனியார் பள்ளி வாகனம் மீது இரயில் மோதிய விபத்தில் உயிரிழந்த மாணவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியின் மூலம் ரூ.10 இலட்சத்திற்கான காசோலையினை வழங்கினர்.

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில் குமார், கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ. ஐயப்பன், நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா. இராஜேந்திரன் ஆகியோர் முன்னிலையில் தனியார் பள்ளி வாகனம் மீது இரயில் மோதிய விபத்தில் பாதிக்கப்பட்டுசிகிச்சை பெற்றுவருபவர்களுக்கு நேற்று முன்தினம் (08.07.2025) நேரில் சந்தித்து நலம் விசாரித்தனர்.

தொடர்ந்து, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் விபத்தில் உயிரிழந்த சுப்பிரமணியபுரத்தினை சேர்ந்த மாணவி சாருமதி, மாணவன் செழியன் ஆகியோர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று அவர்களது உடலுக்கு மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தியதோடு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியின் மூலம் 2 குழந்தைகளுக்கும் தலா ரூ.5 இலட்சத்திற்கான காசோலையினை வழங்கி பெற்றோர்களுக்கு ஆறுதல் தெரிவித்தார்.

அமைச்சர் பெருமக்கள் தெரிவிக்கையில்,

நேற்று முன்தினம் (08.07.2025) காலையில் தனியார் பள்ளி வாகனம் நிமிலேஷ், தொண்டமாநத்தம் (வயது 12), சாருமதி, சுப்பரமணி புரம் (வயது 16), செழியன், சுப்பரமணிபுரம் (வயது 15), விஷ்வேஷ், தொண்டமாநத்தம் (வயது 16) ஆகிய நான்கு மாணவர்களை ஏற்றிக்கொண்டு செம்மங்குப்பம் இரயில்வே கேட்டை கடக்கும் போது இரயில் மோதி ஏற்பட்ட விபத்தின் காரணமாக மாணவன் நிமிலேஷ் மற்றும் மாணவி சாருமதி ஆகிய இரண்டு மாணவர்களும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

மேலும், விபத்தில் காயமடைந்து கடலூர் அரசு மருத்துவமனையில் செழியன், விஷ்வேஷ் ஆகிய மாணவர்கள், வாகன ஓட்டுநர் சங்கர் மற்றும் விபத்து நடந்த இடத்திற்கு உதவிட வந்தபோது அறுந்து விழுந்த மின்கம்பியிலிருந்து மின்சாரம் தாக்கி பாதிப்படைந்த அண்ணாதுரை ஆகிய நபர்களுக்கு தீவிர சிகிச்சை வழங்கப்பட்டது. மேல்சிகிச்சைக்காக ஜிப்மர் மருத்துவ மனைக்கு கொண்டு செல்லப்பட்ட மாணவன் செழியன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இத்துயர சம்பவத்தினை அறிந்த முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து இந்த விபத்தில் உயிரிழந்த குழந்தைகளின் பெற்றோர்களுக்கு தலா ரூ.5 இலட்சம் வழங்கிடவும், பலத்த காயமடைந்து சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ரூ.1 இலட்சம், இலேசான காயம் அடைந்தவர்களுக்கு தலா ரூ.50,000 வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளார்கள்.

இதுபோன்ற இரயில் விபத்துகளை தவிர்த்திட இரயில்வே துறையின் கட்டுபாட்டில் உள்ள உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட வேண்டும். இரயில்வே துறையில் பணிபுரியும் பணியாளர்களுக்கு மாநில மொழியான தமிழ் தெரியாததால், பொதுமக்களுக்கு தகவல் தெரிவிப்பதில் மிகுந்த சிரமம் ஏற்படுவதால் தமிழ் தெரிந்த பணியாளர்களை பணியமர்த்திட வேண்டும்.

அனைவரும் வருந்தத்தக்க மிகவும் துயரமான கோரவிபத்து இன்றைய தினம் ஏற்பட்டுள்ளது. குழந்தைகளை நல்ல முறையில் கல்வி கற்று வாழ்வில் முன்னேற வேண்டும் என்ற கனவுகளோடு பள்ளி வாகனத்தில் பெற்றோர்கள் அனுப்பி வைத்துள்ளனர். அனைவரும் துன்பப்படும், கவலைப்படும் நிகழ்வு ஏற்பட்டுள்ளது. எனவே ஒருவரை ஒருவர் குறை கூறாமல் இதுபோன்று இனிவரும் காலங்களில் நிகழாமல் இருக்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருபவர்களுக்கு தேவையான மருத்துவ உதவிகளை வழங்கி விரைவில் வீடு திரும்பும் வண்ணம் சிகிச்சை நல்ல முறையில் அளிக்க மருத்துவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், இதுபோன்று வாகன விபத்துகள் மீண்டும் ஏற்படாவண்ணம் தடுத்திடும் வகையல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாக அரசின் வழிகாட்டுதலின்படி மாவட்ட நிருவாகத்தின் சார்பில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அமைச்சர் பெருமக்கள் தெரிவித்தனர்.

இந்நிகழ்வில் மாநகராட்சி மேயர் திருமதி சுந்தரிராஜா, துணை மேயர் பா.தாமரைச்செல்வன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.ஜெயக்குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் உள்ளனர்.

### சிவகங்கை மாவட்ட வர்த்தக அணி தனசேகரன் ஏற்பாட்டில்

# ‘ஓரணியில் தமிழ்நாடு’ பரப்புரை உறுப்பினர் சேர்த்தல் நிகழ்ச்சி!

## சி.எம்.துரை ஆனந்த் தலைமை!

சிவகங்கை, ஜூலை 10 -

சிவகங்கை மாவட்ட வர்த்தக அணி சார்பில் சிவகங்கை நகர் 15வது வட்டத்தில் மாவட்ட வர்த்தக அணி துணை தலைவர் தனசேகரன் ஏற்பாட்டின் பேரில் கழக தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் ஆணையின்படி மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வழிகாட்டுதலின்படி ‘ஒரணியில் தமிழ்நாடு’ பரப்புரை கழக உறுப்பினர் சேர்த்தல் நிகழ்ச்சி முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா நகர்ர் மன்ற தலைவர், நகர் கழக செயலாளர் சி.எம்.துரை. ஆனந்த் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் தனசேகரன் வரவேற்றுப் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் ஓரணியில்தமிழ்நாடு பரப்புரை , கழக அரசின் நான்காண்டு சாதனைகள் குறித்தும், கழக உறுப்பினர் சேர்க்கை குறித்து நகர் மன்ற தலைவரும், நகர்கழக செயலாளர் சி.எம். துரை ஆனந்த் சிறப்புரை ஆற்றி . மரக்கன்றுகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கழக செய்தி தொடர்பாளர் அ.அயூப் கான், நகர்மன்ற உறுப்பினர்கள் ஜெயகாந்தன், ராமதாஸ், பிரேம், கார்த்தி ,தகவல் தொழில்நுட்ப அணிசதீஷ், ஓய்வு பெற்ற டி. எஸ். பி. கண்காணிப்பாளர் ஞானசேகரன் , முன்னாள் நகர் மன்ற உறுப்பினர் ஜெயக்குமார் மற்றும் வார்டு பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.



விழுப்புரம் தெற்கு மாவட்டம், திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதி, திருவெண்ணெய்நல்லூர் மேற்கு ஒன்றியம், மழையம்பட்டு, தடுத்தார்கொண்டூர் ஆகிய ஊராட்சியில் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி மண், மொழி, மானம் காக்க இணைவோம் ‘ஓரணியில் தமிழ்நாடு’ புதிய உறுப்பினர் சேர்க்கையை வீடு, வீடாகச் சென்று துவக்கி வைத்தார். உடன் ஒன்றிய செயலாளர் பி.வி.ஆர்.சு.விசுவநாதன், ஒன்றிய குழு தலைவர் ஓம்சிவசக்திவேல், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் நிர்மல் ராஜ், ஒன்றிய நிர்வாகிகள் சடகோபன், ஏழுமலை, மாதவன் , மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் கிருஷ்ணாராஜ், ஒன்றிய விவசாய அணி அமைப்பாளர் வெங்கடேசன், உள்ளாட்சி பிரதிநிதிகள், BLA 2, BDA, கிளைச் செயலாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.